பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 21 வெள்ளிக்கிழமை (07.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 283

# கிழக்கில் தேர்தல் நடத்தும் திட்டம்

# தற்போதைக்கு அரசு ஒத்திவைப்பு

## மாகாண ஆளுநரின் கீழ் அமைக்கப்படும் குழு மூலம் மக்கள் பங்களிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 7

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து கிழக்கு மாகாணத்தை முற்றாக விடுவித்துவிட்டதாக அறிவித்துள்ள அரசு, அங்கு மாகாணசபைத் தேர்தல் மற்றும் ஏனைய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தப்போவதாகத் தகவல்களை வெளியிட்டு வந்தது. எனினும் அந்தத் திட்டத்தை அரசுத் தலைமை இப்போது - தற்காலிகமாக - தள்ளிப் போட்டிருப்பதாக அறியவருகின்றது.

தேர்தல்களை நடத்தி, மக்கள் பிரதிநிதிகளிடம் உள்ளூராட்சி அதிகாரங்களை ஒப்படைப்பதற்குப் பதிலாக, மாகாணசபை மட்டத்தில், மாகாண ஆளுநரின் கீழ் பல தரப்பு மக்கள் பிரதிநிதிகளையும் கொண்ட ஓர் உயர் குழுவை அமைத்து அதன் ஆலோசனையோடு மாகாண ஆளுநரின் ஆட்சி முறையைத் தொடர்வதன் மூலம், மாகாண நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பை இடம்பெறச் செய்யலாம் என்று அரசுத் தலைமை கருதுவதாகவும் தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான யோசனைத் திட்டத்தை முன்வைப்பதைத் தாமதப்படுத்திக் கொண்டு, மறுபுறத்தில் கிழக்கைக் கைப்பற்றுதல், வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் துண்டித்தல், கிழக்கில் தேர்தல்களை நடத்துதல் என்று தன்னிஷ்டப்படி காய்களை நகர்த்தி வரும் இலங்கை அரசுத் தலைமையின் போக்கு, இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேசத் தரப்புகளின் கடும் விமர்சனத்துக்கும் விசனத்துக்கும் உள்ளாகி வருவது தெரிந்ததே.

அரசுத் தலைமையோடு நெருக்கமாக நிற்கும் தமிழர் தரப்புகளில் கணிசமானவை கூட கிழக்கில் தேர்தல் ஒன்றை இன்றைய கட்டத்தில் நடத்துவதைக் கடுமையாக எதிர்க்கின்றன என்று கூறப்படுகின்றது.

கிழக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்திருக்கையில் தேர்தல் ஒன்றை அரசு அங்கு வலோற்காரமாகத் திணிப்பது வீண் விபரீதங்களுக்கு இடமளிக்கலாம் என்பதையும் சம்பந்தப்பட்ட தரப்புகள் அரசுத் தலைமைக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றன என்றும் தெரிகின்றது.

### இந்தியா அதிருப்தி

இதேவேளை, இன்றைய கட்டத்தில் வடக்கு - கிழக்கைப் பிரித்துவிட்டு, கிழக்கில் தனியாகத் தேர்தல் ஒன்றை நடத்தும் கொழும்பின் யோசனை, புதுடில்லியின் கடும் அதிருப்திக்கும் உள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - எதிரணி நேற்று

# நாடாளுமன்றில் குஸ்தி!

## வரி அறவீடு சட்டத் திருத்தங்கள் நிறைவேறின

கொழும்பு, செப்.7

நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் பீடம் நேற்று குஸ்தி மேடையானது. ஆளும்கட்சி - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முஷ்டியை முறுக்கிக்கொண்டு மோதிக்கொண்டனர். இதனால் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. நிதித் திருத்தச் சட்டங்கள் மீதான வாக்கெடுப்பு குழப்பியடிக்கப்பட் டது.

ஐ.தே.க. , ஜே.வி.பி. உறுப்பினர்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் அரசுத் தரப்பு சமர்ப்பித்த ஐந்து சட்டமூலங்களும் நிறைவேற்றப்பட்டன.

எதிர்க்கட்சிகளின் ஒட்டுமொத்த ஆட்சேபனைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் இடையில் அரசால் முன்வைக்கப்பட்ட ஐந்து சட்டவரைவுகளும் நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஐக்கியதேசியக்கட்சி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக நிதித் திருத்தச் சட்டங்களைக் கண்டித்தனர்.

சட்டமூலங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நேரம் முதல் சபையில் அடிக்கடி சொற்போர்கள் இடம்பெற்றுக்கொண்டேயிருந்தன.

### சிறிபதி சூரியாராச்சி பேசும் போது...

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராய்ச்சி பேசும்போது சபையில் ஒரே கூச்சல். அவரைப் பேசவிடாமல் தொடர்ச்சியாக சத்தம் எழுப்பிக் கொண்டேயிருந்தனர் அரசுத் தரப்பினர். எனினும், அவற்றை சட்டை செய்யாமல் சூரியாராய்ச்சி தனது பேச்சைத் தொடர்ந்து நிகழ்த்தி முடித்தார். ஆளுந்தரப்பினருக்கு சளைக்காமல் அவர் பதிலடி கொடுத்துக்கொண்டே இருந்தார்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தில் இன்றும் எதிர்ப்பு

கொழும்பு, செப்.7

நாடாளுமன்றத்தில் இன்றும் ஆர்ப்பாட்டங்கள் செய்யப்போவதாக ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது.

வரி விதிப்பு சட்ட மூலங்கள் மீதான வாக்கெடுப்பு நேற்று இடம்பெற்றபோது ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது போலவே

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியும் போர்க்கொடி

கொழும்பு, செப். 07

நாடாளுமன்றத்தில் நேற்று அமளிதுமளியின் மத்தியில் நிறைவேற்றப்பட்ட நிதிச் சட்டமூலங்களை ஏற்கமுடியாது என்றும், அவை சட்டவிரோதமானவை என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பான பிரச்சினையை தமது கட்சி இன்றும் நாடாளுமன்றில் கிளப்பவுள்ளதாகவும் ஜே.வி.பி கூறியுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு மணிநேர இடைவெளியில் பெண் உட்பட இருவர் சுட்டுக்கொலை

## கொக்குவில் ஆடியபாதம் வீதியில்

யாழ்ப்பாணம், செப்.7

கொக்குவில், ஆடியபாதம் வீதியில், நேற்றுக்காலை ஒரு மணிநேர இடைவெளியில் பெண் உட்பட இருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இரண்டு கொலைச் சம்பவங்களும் கால் மைல் தூர இடைவெளியில் இடம்பெற்றன.

கொக்குவில் கிழக்கில் இராசேந்திரன் சதிஸ் (வயது 24) என்பவர் நேற்றுக்காலை 8.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மண்டைதீவைச் சேர்ந்த இவர் கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தார். மருந்தகம் ஒன்றின் வான் சாரதியாக இவர் பணியாற்றினார்.

ஆடியபாதம் வீதியில் உள்ள கடை ஒன்றில் தொலைபேசிக்கான 'காட்' வாங்கச் சென்றவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுத தாரிகள் அவரைச் சுட்டுவிட்டுச் சென்றனர்.

முதலாவது சம்பவம் நடைபெற்ற ஒரு மணி நேரத்தில் - மு.ப. 9.30 மணியளவில் - யாழ்.மருத்துவ பீடத்துக்கு சமீபமாக ஆடியபாதம் வீதியில் நாவலடி ஒழுங்கையில் இராசலிங்கம் சுபாஜினி (வயது 30) என்ற பெண் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அந்தப் பெண்ணை வழிமறித்த ஆயுததாரிகள்,

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கைத்தொலைபேசிக்கு ரூ. 50 அறவிடும் திட்டம் நீக்கம் என்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, செப்.7

கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கான நிலையான கட்டண அறவீடாக 50 ரூபா வரி வசூலிக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற -வரிகளை அதிகரிக்க வழிசெய்யும் திருத்தச்சட்டமூலங்கள் மீதான - விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் உள்ள கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களில் 80 வீதமானவர்கள் பாவனைக்கு முன் பணம் செலுத்துபவர்கள். (Pre Paid) அவர்களில் 60 வீதமானவர்கள் மாதாந்தம் 200 ரூபாவிற்கு மேற்படாத கட்டணத்திற்குள் கையடக்கத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா–இலங்கை இணைந்து அறுவர் உயர் பாதுகாப்புக் குழு

கொழும்பு, செப்.7

இலங்கை அரசின் உயர் மட்டக்குழு புதுடில்லி சென்று, இந்திய அரசுத் தலைமையுடன் நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து இரு நாடுகளும் சேர்ந்து உயர்மட்டப் பாதுகாப்புக்குழு ஒன்றை நியமித்திருக்கின்றன.

இந்தக் குழுவில் இலங்கைத் தரப்பில் இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரும்-

இந்தியத் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் விஜய் சிங், பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோரும்- இடம்பெறுகின்றனர்.

புதுடில்லியில் இலங்கை உயர் அதிகாரிகள் குழு கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடத்திய பேச்சுகளின் பெறுபேறாகவே இந்தக்குழு அமைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கை ஜனாதி

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லியடி இளைஞன் யாழ். நீதிமன்றில் சரண்

நெல்லியடியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். நீதிமன்றில் நேற்றுச் சரண் அடைந்தார்.

அவரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கும்படி யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

அதேவேளை - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சரண் அடைந்த 4 பேரும் யாழ். நீதிமன்றத்தில் நேற்றுமுன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அவர்களை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1)

## மரண அறிவித்தல்கள்

### டேவிற் கொஸ்ரா

**(உரிமையாளர் - கொஸ்ரா தையலகம்)**



கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் கொஸ்ரா (அனிஸ்ரன்) 04.09.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் டேவிட் - யோகறாணி தம்பதியரின் அன்பு மகனும் மேரிகலிஸ்ரா (வதனா)வின் அன்புக் கணவரும் அன்ரன் - செபமாலையம்மா (லீலா) ஆகியோரின் மருமகனும் ஸ்ரெலின் (பிரான்ஸ்), பிலிஸ்ரீனா (கனடா), றூபன் (லண்டன்), லக்ஸ்மன்ராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருளானந்தம் திரேசம்மா, காலஞ்சென்றவர்களான பிலிப், ஆசிர்வாதம், இ. ஆசீர்வாதம் சலோமை திரு. திருமதி இராயப்பு, அருட் திரு. ஜாவிஸ் அடிகள் ஆகியோரின் பேரனும் பிரான்சிஸ், வின்சன் (பிரான்ஸ்), புஸ்பம் லூர்த்தம்மா, றீற்றா ஆகியோரின் பெறாமகனும், றோஸ்மலர், காலஞ்சென்ற புஸ்பம் மற்றும் லில்லி வேதநாயகம், செல்வநாயகம், அரியநாயகம் (இந்தியா), குணம் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் சாந்தி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), ஜான்சி (லண் டன்), சுவேந்திரன் ஆகியோரின் சகலனும் அனுசியா, அருள்றூபன், அனுசன், யசோ, சிந்து, அஜந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமல்யா (பிரான்ஸ்), றுபிற்றன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் சபீனாவின் (கனடா) மானுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறையில் 23/1, சென். மேரீஸ் முதலாம் ஒழுங்கை, A.V. றோட்டில் அமைந்திருக்கும் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இன்று (07.09.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித செபமாலை அன்னை ஆலயத்திற்கு ஆராதனைக்காக வைக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(64607)

### இராசேந்திரன் சதிஸ்

**(மண்டைதீவு)**



அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரன் சதிஸ் நேற்று (06.09.2007) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பெரியதம்பி இராசேந்திரன் - மைலேஸ்வரி (நிலா) தம்பதியரின் ஏகபுத்திரனும் சோபனா, துவேனி ஆகியோரின் சகோதரனும் திருமணிதேவி யோகநாதனின் சிறிய மகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2007) பிற்பகல் 3 மணிக்கு அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பெ. இராசேந்திரன் (தந்தை).**

### திருமதி இராசையா பவளம்மா

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருமதி இராசையா பவளம்மா நேற்று (06.09.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசையாவின் (வெள்ளை இராசையா) அன்பு மனைவியும் இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, ஜெயச்சந்திரன், ஜெயபாலச் சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்ளான கனகரத்தினம், தபேந்திரன் மற்றும் கணகநாயகம், நாகலட்சுமி, கிருஷ்ணபவானி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி வீதி,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

### அருளானந்தம் யேசுதாசன் (ஜே.பி.)

**(ஓய்வுபெற்ற அலுவலர், இலங்கை மின்சார சபை கொழும்பு தலைமையகம்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 26/3, சேனநாயக்க மாவத்த, நாவலை, இராஜகிரியவை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் யேசுதாசன் 05.09.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா அருளானந்தம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கறலைனின் அன்புக் கணவரும் புஷ்பராணியின் தந்தையும் கபிலனின் மாமனும் காலஞ்சென்றீ றோசலின், யோசப் மற்றும் அருட் சகோதரி லூட்ஸ் (பிரான்சிஸ்கன் சபை - மட்டக்களப்பு), அன்ரன் ஞானப்பிரகாசம் (இ.மி.ச. மத்திய மின் நிலையம் - சுன்னாகம்) ஆகியோரின் சகோதரரும், கிருபா அன்ரன், சி. யேசுதாசன் (இ.மி.ச. முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்) ஆகியோரின் மைத்துனரும் அகேஷ், அக்ஷிகா ஆகியோரின் பேரனும் பிறிற்றோ, வேர்ஜினியா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.09.2007) ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலை இராஜகிரிய பொது மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அருள் யோறோஸ் வாசா",*
*41, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (64610)

தகவல்:
**அன்ரன் ஞானப்பிரகாசம்**
(சகோதரன்)

# மாணவர்களுக்கான சித்திரப் போட்டி: 2ஆம் சுற்றுக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், செப். 7

கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் நடத்தப்படும் மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் முதல் சுற்றில் பங்குபற்றி இரண்டாம் சுற்றுக்குத் தெரிவானவர்களுக்கான போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வரைதலுக்கான உபகரணங்களை (வரைதல் தாள் அளவு 14"x18", வர்ணம் என்பன) போட்டியாளர்களே கொண்டுவர வேண்டும் என மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

இரண்டாம் சுற்றுக்கு அழைக்கப்பட் டோர் விவரம் வருமாறு:

*ஆரம்ப பிரிவு -*

வி. பஸ்ணா, ரி. தனுஷன், ஆர். அனோஜன், வை. ஜோயநேசன்.

*ஆரம்பப் பிரிவு (இரண்டாம் நிலை) -*

கே. யதுகோபி, எஸ். சண்முகபவன், ரி. தர் சன், கே. றஜீந்தன், எ. அஜந்தநாத், எ.சுகன்யா, எஸ். ஜனனி, எஸ்.கே. தேவநாயகம், சி. சன் ஜயன், வி. ஜென்சிகா.

*கனிஷ்ட பிரிவு -*

தாஸ், ரி. கயூரன், பிரவீனன், ஆர். கலை வாணி, எஸ். துஷ்யந்தன், பி. மிதுனன், ரி. தர்சிகன், ஆர். சிவரஞ்சினி, ஜே. சதீஸ்வரன், என். கௌசிகன், ரி. தக்ஷனா.

*சிரேஷ்ட பிரிவு -*

எம். தார்மீகன், வை. சத்துருக்கன், எஸ். சாருஜன், தாட்சாயினி, என். நர்மினா, ஜி. ஜொனிபிரிங்சன், என். மருசியா, பி. கார்த்திகா, ஏ. ஆர். றியாஷா, ரி.எவ். பஸ்மிலா, எம்.எவ். சவ்றா, என். சவ்னா, எஸ். சிவானுசா, எ. இதயமலர், எஸ். திஷிகா, ஆர். கிரிஜன், ஜே. ருக்ஷலா, எஸ். பிரியங்கா, எ. கௌதமி, எம். திசோரதன், இ. ரஜீவன், ரி. தயானா, பி. கலையரசன், பி. சஜந்தன், கே. றோகினி, எஸ். சுஜேந்தினி, கே. பெருந்தவராசா, எம். சுபானு, எஸ். லதன், பி. நிசாந்தன்.

*சிரேஷ்ட பிரிவு (இரண்டாம் நிலை)-*

எஸ். சர்மிளா, பி. யசோதா, எம். கலாரஞ் சினி, எஸ். வாகீசன், எஸ். நிசாந்தி, எஸ். அர்ச் சனா, வை. சிவேந்தன், வை. அரவிந்தன், வி. அஜந்தினி, ஆர். கிருதிவாசன், பி. மேனன், எ. அஜந்த், எ. நிஷாந்தினி, நிலானி சார்லஸ், எம். தினேஷ், எஸ். கோபாலகிருஷ்ணன், பி. சிவசொரூபன், பி. தர்ஷிகா, எஸ். றஜினி, சி. கே. கிரிஷ்டிராஜ், ஜே. சௌந்தர சிங்கம், எஸ். சகாயநாதன, மருஜனா கருணாகரன், என். யோகராஜா, கே. ஏகானந்தசிவம், இ. தயாளினி, ஜே. திவ்யா, ஆர். மோகன ரஞ்சனி, ஜே. தர்னி, எ. பூவதனி. (1)

## ஐ.தே.கவின் ஞாயிறு கூட்டத்துக்கு தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு

### அமைச்சர் தயாரத்னவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, செப்.7

நாளை மறுதினம் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டியிருக்கும் விசேட பேராளர் மாநாட்டுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்துவிட்டது.

ஐ.தே.கட்சியிலிருந்து அரசுப் பக்கம் தாவி, அமைச்சராகியிருக்கும் பி.தயாரத்ன சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எதிர்மனுதாரராக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாளை மறுதினம் ஐக்கிய தேசியக்கட்சியின் பேராளர் மாநாடு ஒன்று கூட்டப்பட்டிருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவைச் சேர்ந்த மங்கள சமரவீர அணியுடன் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் குறித்து இந்த மாநாட்டில் ஆராய்ந்து இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்தக் கூட்டம் முறையான விதத்தில் கூட்டப்படவில்லை என மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சிசிர ரத்னாயக்கா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுவை ஆராய்ந்த நீதிபதி இடைக்காலத் தடை விதிக்க மறுத்து விட்டார். (சி)

## தமிழ்க் குடும்பஸ்தர் இருவர் கன்னியாவில் கடத்தப்பட்டனர்

கொழும்பு, செப். 7

திருகோணமலை மாவட்டம் உப்புவெளிப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கன்னியாப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் வீட்டிலிருந்த தமிழ்க் குடும்பஸ்தர்கள் இருவர் வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

அதேபகுதியைச் சேர்ந்த சுபமலை ஜெயராஜன் (வயது -40) மற்றும் ரஞ்சன் (வயது -29) ஆகியோரே கடத்திச் செல்லப்பட்டவர்களாவர். உப்புவெளிப் பொலிஸார் இவ்விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## எரிவாயுவின் விலை அதிகரித்தது

கொழும்பு, செப். 7

'லாவ்' எரிவாயுவின் விலையும் 188 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கான அனுமதியை உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியது.

இதனையடுத்து சாதாரண 'லாவ்' எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை இனி 1,248 ரூபாவாகும்.

'லாவ்' நிறுவனத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவைப் பரிசீலித்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, ஜகத் பாலபட்டபெந்தி ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் இந்த இடைக்கால நிவாரண ஏற்பாட்டை அந்த நிறுவனத்துக்கு வழங்கும் உத்தரவை நேற்று விடுத்தது.

ஏற்கனவே கடந்த வாரம் 'ஷெல்' எரிவாயுவின் விலை 213 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 1,298 ரூபாவை எட்டியிருக்கின்றது.

இந்த நிலையிலேயே 'லாவ்' எரிவாயுவின் விலையை 1,248 ரூபாவாக உயர்த்தும் வகையில் இடைக்கால நிவாரண உத்தரவை உயர் நீதிமன்றம் வழங்கியது.

எரிவாயு விலை நிர்ணயம் தொடர்பாக 'லாவ்' எரிவாயு நிறுவனத்துக்கும் நுகர்வோர் அதிகார சபைக்கும் இடையிலான [illegible] நீதிமன்றத்தில் [illegible] குறிப்பிடத்தக்கது. (சி)


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
T.R.R.O Computer Training Center
புதிய பிரிவுகள் ஆரம்பம்...
Diploma Courses
- Diploma in Microsoft Office XP
- Diploma in Desktop Publishing
- Diploma in Webpage Designing

விண்ணப்பப்படிவங்களை இங்கே பெறலாம்
T.R.R.O Computer Training Center
106, 4th Cross Street, Jaffna.
Branch Office:- MC Leod Hospital K.K.S. Road Inuvil.
ஆரம்பம் :- 15.09.2007 சனிக்கிழமை காலை 10 மணி
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.



WESTERN UNION
வெளிநாட்டிலிருந்து உறவினர்கள்
பணம் பரிமாற்றம்
WESTERN UNION மூலம் பணம் அனுப்பி
பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN IO இலக்கங்கள்)
கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில்
உங்கள் கைகளில் பணத்துடன்
பரிசில்களையும் பெற்றுக் கொள்ள
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD,
JAFFNA. (C/53261)
T.P.: 021- 222 2670, 5392
Fax: 021- 2223214
e.Mail: srimurugan @ eureka.lk


## நெஞ்சை நெருடும் ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மனம்மகிழ
02 - 09 - 1980



தாயின் மனம்நெகிழ
19 - 08 - 2006

**அமரர் சூரியபாலன் மயூரதன்**


திதி:07.09.2007

வலிக்கிறது இதயம்
வாழ்விடம் பிரிந்தாய்
நீ வாழ்விடம் பிரிந்தாலும்
எங்கள் இதயநதியில்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் பசுமையான நினைவுகள்
என்றென்றும் எம் மனதில்
ஓடமாய்
ஓடிக்கொண்டே இருக்கும்.

14, பழம் வீதி,
கந்தர்மடம். (64613)

தங்கள் பிரிவால் துயருறும்:
தந்தை, சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை ஒட்டி குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர் களும் குருதிக் கொடையாளர்களும் மங்கள வாத்தியத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை இரண்டாவது படத்திலும் குருதித் தேவையில் தங்கியுள்ள சிறுவன் கு.கோவேந்தன் உரையாற்றுதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# குடாநாட்டில் தங்கியுள்ள வன்னி மக்கள் பதிவுகளை மேற்கொள்வதில் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.7

ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதால் குடா நாட்டிலேயே தங்கியுள்ள வன்னிப் பிரதேச மக்கள் பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் யாழ்.மாவட்டத்திற்கு வந்திருந்த வன்னிப் பிரதேச மக்கள் ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதால் திரும்பிச் செல்ல முடியாது இங்கேயே தங்கியுள்ளனர்.

வன்னிக்குச் செல்வதற்கு வேண்டிய பொருளாதார வசதியில்லாததால் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்குடும்பங்கள் யாழ்.மாவட்டத்தில் குடும்பப் பதிவுகள் எதனையும் மேற்கொள்ளாமலேயே தங்கியுள்ளன.

இவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதாயின் படையினரின் அனுமதி பெறுவதற்கு கிராம அலுவலரின் சிபார்சைப் பெற முடியாது திண்டாடுகின்றனர்.

அத்துடன் தற்போது படையினரால் குடும்ப விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதால் யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தாம் பதிவுகளை மேற்கொள்வதா இல்லையா எனத் தெரியாது திண்டாடுகின்றனர். (202-207)

# இருதய சத்திரசிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு சுகாதார அமைப்பு உதவி

குருநகர்,செப்.7

இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய வசதிகுறைந்த குழந்தைகளுக்கான பிரயாண, வைத்திய செலவுகளை சர்வதேச வைத்திய சுகாதார அமைப்பு பொறுப்பேற்கத் தயாராகவுள்ளது.

இத்தகவலை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் -

இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும் என வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட சில குழந்தைகள் வசதி குறைவு காரணமாக சிகிச்சை மேற்கொள்ளாதிருக்கின்றனர். இவர்களுக்கு இந்தியா அல்லது கொழும்பில் சிகிச்சை வழங்குவதற்கு தேவையான பிரயாணச் செலவுகள் மற்றும் வைத்திய செலவுகளைப் பொறுப்பேற்க சர்வதேச வைத்திய சுகாதார அமைப்பு தயாராகவுள்ளது.

இந்த வைத்திய உதவிகளைப்பெற விரும்பும் குழந்தைகளின் பெற்றோர் யாழ். போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் லக்ஷ்மனுடன் தொடர்புகொள்ள முடியும் - என்றார். (202-51)

# நல்லூர் பிரதேச அபிவிருத்திக்கு 5.5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நல்லூர்,செப்.7

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலைய புனரமைப்புக்கு சமூக சேவைகள், சமூகநலத்துறை அமைச்சரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.சிவாஜிலிங்கம் திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் சனசமூகநிலைய புனரமைப்பு தொடர் வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் கொக்குவில் இந்து மயான புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோண்டாவில் வாகீஸ்வரி முன்பள்ளி அபிவிருத்திக்கு 50 ஆயிரம் ரூபாவும் கொக்குவில் இந்து மயான அபிவிருத்திக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர் என நல்லூர் பிரதேசசபை செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்துள்ளார். (202-111)

# கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.7

கிராம உத்தியோகத்தர்களுக்கு கடந்த புதன்கிழமை ஆரம்பமாகவிருந்த பயிற்சி வகுப்புகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் தற்பொழுது எதிர்கொள்ளும் வேலைப்பளு காரணமாக இப்பயிற்சி வகுப்பை ஒத்திவைக்குமாறு யாழ்.அரச அதிபரை சங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இவ்வகுப்பு ஒத்திவைக்கப்பட்டதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (202)

# நெடுந்தீவில் ஊரடங்கு ஒரு மணித்தியாலத்தால் தளர்வு

நல்லூர்,செப்.7

நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஊரடங்கு உத்தரவு கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒரு மணித்தியாலத்தால் தளர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணிவரை அமுலில் இருந்து வந்த ஊரடங்கு உத்தரவு தற்போது இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 5 மணிவரை அமுலில் இருக்கும் என நெடுந்தீவு கடற்படை கட்டளை அதிகாரி அறிவித்துள்ளார்.

அண்மையில் கட்டளை அதிகாரி பொது மக்களுடன் நடத்திய சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தார்.

நெடுந்தீவில் இருந்து வாரத்தில் ஒரு தடவை 8 ஆடுகளையும் 6 மாடுகளையும் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லலாம், கப்பல் பயணத்திற்கான படிவங்கள், பிரயாணத்திற்கு அனுமதி வழங்கல் போன்றவை இனிமேல் நெடுந்தீவிலேயே மேற்கொள்ளப்படும்.

நெடுந்தீவுக் கடலில் மீன்பிடிப்பதற்கான தடை விரைவில் நீக்கப்படும். பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் சமயச் சடங்குகள், வழிபாடுகள் என்பவற்றுக்கு அனுமதி வழங்குவது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார். (202-111)

# சட்டவிரோத இணைப்பு பெறுபவர்களால் மின் பாவனையாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,செப்.7

குடாநாட்டில் சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்களால் பல இடங்களில் மின் தடை ஏற்படுகின்றது. இதனால் சட்டரீதியாக மின் இணைப்புப் பெற்றவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வடமராட்சியிலும் யாழ். நகரின் சில முக்கிய பகுதிகளிலும் இந்நிலை அடிக்கடி இடம்பெறுவதாகப் பாவனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இரவு வேளைகளிலேயே அதிகமானோர் சட்டவிரோத மின்னிணைப்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அவ்வாறு மின்னிணைப்பை ஏற்படுத்தும்போது அயலிலுள்ள வீடுகளின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு சில நிமிடங்களின் பின்னரே வருகின்றது. சில வேளைகளில் மின் உபகரணங்கள் பழுதடையும் நிலையும் ஏற்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து பாவனையாளர்களின் சிரமத்தைத் தீர்க்க வழி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

இதேவேளை -

நல்லூர் பிரதேசத்தில் மின் விநியோகம் அடிக்கடி ஸ்தம்பிதமடைவதாகப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று தினங்களாக மின்சார விநியோகம் இரவு 7.30 மணிக்கும் 9 மணிக்குமிடையில் ஸ்தம்பிதமடைவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-111-155)

# கசிப்பு உற்பத்திக்கென கோடா வைத்திருந்த பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,செப்.7

சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா வைத்திருந்த பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொதுமக்கள் கொடுத்த ரகசியக் தகவலையடுத்து மதுவரித் திணைக்களத்தினர் மீசாலை வடக்கில் உள்ள வீடொன்றினை முற்றுகையிட்டு சோதனை நடத்தியபோது 40 லீற்றர் கோடாவைக் கைப்பற்றினர்.

கோடா வைத்திருந்த பெண்ணுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இவ்வழக்கை விசாரித்த நீதிவான் குற்றத்தை ஒப்புக்கொண்ட பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் 16 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (202-207)

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்ப்பாணம் மற்றும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகங்களுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். வலயத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், செங்குந்த இந்துக் கல்லூரி, கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வரணி மகாவித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1ஐச் சேர்ந்தவர்கள், அதிபர் சேவை வகுப்பு II தரம் I ஐச் சேர்ந்த பட்டதாரிகள் ஆகியோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் தவிர்ந்த ஏனைய வலயக் கல்வி அலுவலகங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் தாங்கள் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து மேற்படி பதவியை ஏற்பதற்கு விடுவிக்க முடியும் என்ற தங்களுக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202-207)

# உலக விசர்நாய்க்கடி தினம் - செப்.08ஆம் நாள்

**யாழ். குடாநாட்டில் இந்நோயை முற்றாக ஒழிக்க**



சகல வளர்ப்பு நாய்களுக்கும் ஊசி ஏற்றப்படுவதினால் விலங்குகளுக்கு ஏற்படாது தடுக்கலாம். இதன் மூலம் மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர். 2006 ஆம் ஆண்டு 53, 673 வளர்ப்பு நாய்களுக்கு 70வீதம் ஊசி ஏற்றி பாதுகாக்கப்பட்டது.

2007 ஜூலை வரை 45,136 வளர்ப்பு நாய்களுக்கு 54 வீதம் பாதுகாக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் வரை இது 80 வீதமாக அதிகரிக்கும்.

இதுவரை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளான கோப்பாய், பருத்தித்துறை, மானிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் நிறைவு பெற்று தற்பொழுது ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

**"எம்மை அண்டி வாழும் காவலனாகவும் அன்பான செல்லப் பிராணியாகவும் எம் வீட்டு நாயை பேணி வளர்க்க வேண்டியது எமது பொறுப்பு."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி மாணவர்களுக்கு!!!

**IIS இன் 90% Mega Offer**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு III 09.09.2007 மு.ப.9 மணி

பிரிவு IV 15.09.2007 மு.ப. 9 மணி

அதிரடி கட்டணக் குறைப்பு

- Diploma in Microsoft Office
- Diploma in Computer Programming
- Diploma in Internet Technology
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Technology

Fast Track Classes

பதிவுகள் அனைத்தையும் உடனடியாக மேற்கொள்ளவும்.

Institute of Informatics Studies
Nelliyady, Karaveddy.
T.P.: 021 226 3335

(64203)



**ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

01. பதவி வெற்றிடம்
கீழ்வரும் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
பதவி:- பொதுமுகாமையாளர்
பதவி கு. இல. 101/08
சம்பளத்திட்டம்:- (66/2006 சுற்றுநிருபப்படி)
11200 - 14100
140X10 - 150X10

02.கல்வித்தகைமைகள்:-
அ) கூட்டுறவுப்பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் / 10 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்
அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்
அல்லது
இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த) சித்தி, க.பொ.த. (உ/த) 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

03 வயதெல்லை:- 18-45 வரை
விண்ணப்ப முடிவு திகதி:- 25.09.2007
குறிப்பு:-
01. வயதெல்லையில் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது, கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்களது சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
02.விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.
03.அனுப்ப வேண்டிய முகவரி:- தலைவர்,
ஊர்காவற்றுறை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
வைத்தியசாலை வீதி, ஊர்காவற்றுறை.

(64541)



சிவமயம்

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ்
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் நிதியுதவியுடன்
இயங்கும் சாவகச்சேரி கணனிப்பயிற்சி நிலையத்தின்

மூன்றாம் ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

**அழைப்பு**

காலம் :- நாளை (08.09.2007) சனிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- பயிற்சி நிலைய மண்டபம்



தலைவர்
**திரு.வி.இராஜரட்ணம்**

பிரதம விருந்தினர்
**திருமதி.அ.வேதநாயகம்**

**சிறப்பு விருந்தினர்கள்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கணனி பயிற்சி நிலையம், 114 டச்சு வீதி, சாவகச்சேரி.


## சுகாதாரப் பரிசோதகர் பற்றாக்குறை நீக்கப்படும்

யாழ்ப்பாணம், செப்.7

குடாநாட்டில் மிக நீண்ட காலமாக நில விவந்த சுகாதாரப் பரிசோதகர்கள் பற்றாக் குறை மிகவிரைவில் நீக்கப்படும் என்று மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் ரி.மகா தேவன் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பகுதி யில் 5 சுகாதார பரிசோதகர்களுக்குரிய வெற்றிடம் உள்ளது. சுன்னாகம், நல்லூர் போன்ற பகுதிகளிலும் சுகாதார பரிசோத கர்களுக்குரிய வெற்றிடம் உள்ளது.

2007ஆம் ஆண்டிற்குரிய சுகாதார பரி சோதகர் பயிலுநர் பரீட்சையில் யாழ்ப்பா ணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 36 பேர் சித்தி யெய்தியுள்ளார்கள்.

இவர்களுக்குரிய நியமனம் அவர்கள் வசிக்கும் மாவட்டத்திற்கு ஏற்ப எதிர்வரும் முதலாம் திகதி வழங்கப்படும் என்றும் -

இதனால் குடாநாட்டில் நிலவிவந்த சுகாதார பரிசோதகர் பற்றாக்குறை நீக் கப்படும் - என்று அவர் மேலும் தெரி வித்தார். (202-69)

## திருத்திவாசிக்கவும்

"3 வார காலத்தில் 34 பேர் காணாமல் போயுள்ளனர்; செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவிப்பு" - என்ற தலைப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை உதயனின் முதலாம் பக்கத்தில் பிரசுரமாகிய செய்தியில் கடை சிப் பந்தியில் அமைந்துள்ள விடயம் குறித்து தன்னுடைய சிரத்தையை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

'அரசில் இணைந்து செயற்படும் ஆயு தக்குழுவொன்று சிறுவர்களைப் படையில் சேர்ப்பது குறித்தும், சர்வதேச மற்றும் உள் ளூர் மனித உரிமை அமைப்புகள் விமர்சிப் பது தொடர்பாகவும் செஞ்சிலுவைச் சர்வ தேசக்குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது' - என அப்பந்தியில் கூறப்பட்டிருந்தது.

அதனை -

'அரசில் இணைந்து செயற்படும் ஆயு தக்குழுவொன்று சிறுவர்களைப் படையில சேர்ப்பது குறித்து சர்வதேச மனித உரிமை கள் அமைப்புகள் அரசை விமர்சித்து வரும் சூழ்நிலையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் இந்தப் புள்ளிவிவரத் தகவல் வெளி யாகியி ருப்பது குறிப்பிடத்தக்கது' - என்று திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## முட்டை விலை வீழ்ச்சி

குருநகர், செப்.7

யாழ்ப்பாணத்தில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதுவரை காலமும் 23 ரூபா தொடக்கம் 25 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த இதன் விலை தற் போது 20 ரூபாவாக வீழ்ச்சியடைந் துள்ளது.

ஆலயத் திருவிழாக் கள் நடைபெறுவதே இவ்விலை வீழ்ச் சிக்கான காரணம் என தெரிவிக்கப் படுகிறது.(203-51)

## பலவருடமாக திருத்தப்படாத வீதி

கம்பர் மலை பத் தினியம்மன் ஆலய பிரதான வீதி பல வருடங்களாக பெரும் சேதமடைந்த நிலை யில் உள்ளது.

மேற்படி வீதி உடுப்பிட்டி கிராம சபையின் எல்லைக் குள் இருக்கின்றது. மேற்படி சபையின் எல்லைக் குள் இருக்கும் வீதிகள் பலபுனரமைக்கப் பட்ட போதும் பல வருடங்களுக்கு மேலாக சேதமடைந் துள்ள இவ்வீதி திருத் தப்படவில்லை.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் பல தடவைகள் முறைப் பாடு செய்த போதும் உரிய நடவடிக்கை கள் எடுக்கப்பட வில்லை எனஅவர் தம் கவலை தெரி வித்துள்ளனர். (203-155)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**



திருமதி
**செல்லத்துரை நாகம்மா**

மலர்வு 07-11-1923

உதிர்வு 08-08-2007

...து அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தி யோருக்கும் தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் நல்கியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (07.09.2007) வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (64542) குடும்பத்தினர்.



**உடனடி வேலை வாய்ப்பு**

- என்னிடம் திறமையும் விவேகமும் உள்ளது.
- அதியுயர் சம்பளம் பெறவேண்டும் என்ற ஆசையுள்ளது.
- வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்றவிருப்பம் உள்ளது.
- A/L பரீட்சையும் முடிந்துவிட்டது. ஆனால் வேலை மட்டும்?

விண்ணப்பியுங்கள்...

தனியார் காப்புறுதி வரலாற்றில் 21 வருடங்களை கடந்து முன்னணி வகிக்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் PLC தனது சேவையினை பிரதேச ரீதியாக

- காப்புறுதி விற்பனைப் பிரதிநிதிகள்
- காப்புறுதி விற்பனை ஆலோசகர்களை தெரிவுசெய்ய வுள்ளது.

தகைமைகள்: க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட 6 பாடங் களில் சித்தி.முன்னனுபவம் விரும்பத்தக்கது. (கட்டாயமல்ல)

·நீங்கள் அனுபவிக்கக் கூடியவை

- வரையறுக்கப்படாத அதியுயர் சம்பளம்
- உங்கள் திறமைக்கேற்ப பதவியுயர்வுகள்.
- மாதாந்தம், வருடாந்தம் நடத்தப்படுகின்ற போட்டிகளில் வெற்றிபெறுவதுடன் வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகளும்
- SLII பரீட்சையில் சித்தியடையும் அரிய சந்தர்ப்பம்.
- விற்பனையின் ஊடாக சர்வதேச சான்றிதழைப் பெறும் வாய்ப்பு.
- இலவச ஆயுட்காப்புறுதி வசதிகள்
- மோட்டார் வாகன வசதிகள், இன்னும் பல.

சுயவிவரக்கோவை அனுப்பவேண்டிய முடிவு திகதி:15.09.2007

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
A.ANTON (D.O)
UNION ASSURANCE PLC
139, STANLY ROAD, JAFFNA.
T.P.: 0773107776
Office : 021 222 3753

(C53575)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் 25 . 07 . 1931



அம்பாள் பாதத்தில் 18 . 08 . 2006

திருமதி
**சுபத்திரை சின்னத்துரை** *(பொன்குட்டி)*

*திதி: ஏகாதசி (07.09.2007 )*

*இவ்வுலகில் பிறப்புளதேல் இறப்புமுண்டு எனினும்*
*நடமாடும் தெய்வமாய் இருந்து நிஜமாகும் தெய்வமாய்*
*எம்மனதில் வாழும் அம்மாவிற்கும் இதுதகுமா?*
*அன்பின் உறைவிடமாய்*
*பண்பின் சிகரமாய்*
*பாசத்தின் ஒளிவிளக்காய்*
*பொறுமையின் அணிகலனாய்*
*வாழ்ந்த எம் அம்மாவின் எழில்முகமும்*
*நினைவுகளும் என்றும் எங்கள்*
*மனதை விட்டு நீங்காது*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்*
*எங்கள் அம்மாவிற்கு ஈடாகுமா.*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.*

க.சின்னத்துரை *(கணவர்)*,
விமலன், பவன், சதாகுடும்பம், றூபன் குடும்பம், பாமினி ராஜ்குமார் குடும்பம் *(மகன்மார்)*,
திருமதி கதிரவேற்பிள்ளை *(மைத்துனி)*,
பேரப்பிள்ளைகள்,

'துவாரகை',
இணுவில் றோட்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(64508)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்குத் தாயகத் தமிழ் மக்களை விட அந்த மண் மீது சிங்கள அரசுக்குத்தான் மோகம்!

## அதனால்தான் அங்கு நில ஆக்கிரமிப்பு என்கிறார் துரைரட்ணசிங்கம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களை விட சிங்கள அரசுக்கும் இராணுவத்தினருக்குமே அப்பிரதேச மண்மீதான மோகம் அதிகரித்துள்ளது. அரசு அங்கு திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பை மேற்கொண்டு வருகின்றது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றத்தில் வடக்கு-கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பான விசேட விவாதத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது மூதூர் கிழக்கு, சம்பூர் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இன்றும் அகதி முகாம்களில் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு பல ஆயிரம் ஏக்கர் காணிகள் அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அபகரிக்கப்பட்டுள்ளன.

அப்பிரதேச மக்கள் வீடுகள், வயல்கள், காணிகள், வாகனங்கள் என சகல உடைமைகளையும் இழந்து உடுத்த உடையுடன் இருக்கின்றனர்.

இவர்களை இறால்குழி, சங்குவெளி ஆகிய இடங்களில் பலவந்தமாகக் குடியமர்த்தப் பார்க்கின்றனர்.

குடியேற்றத்துக்கு பொருத்தமற்ற காணியில் எந்தவொரு குடிமகனும் குடியேறப் போவதில்லை.

அரசு பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் வாழ இடமளிக்கவேண்டும்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சிதான் நடக்கின்றது. 10 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கட்டாயமாக இராணுவ பாஸ் பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர். தேசிய அடையாள அட்டை ஒன்று இருக்கும்போது இராணுவ அடையாள அட்டை அவசியமா?

இதுதான் அரசு மேற்கொள்ளும் சிவில் நிர்வாகமா?- என்றும் துரைரட்ணசிங்கம் கேள்வி எழுப்பினார். (சி)

## நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவையொட்டி பஜனை யாத்திரை

யாழ்ப்பாணம், செப்.7

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழாவையொட்டி நயினாதீவில் இருந்து நல்லூருக்கு இன்று வெள்ளிக்கிழமை திருத்தலப் பஜனை யாத்திரை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று மாலை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து திருமுறை பஜனை ஆரம்பமாகி நடைபெறும்.

இந்தப் பஜனை யாத்திரை குறிகாட்டுவான் - புங்குடுதீவு - வேலணை - மண்கும்பான் - அல்லைப்பிட்டி - மண்டைதீவு- பண்ணை - வில்லூன்றி - கந்தர்மடம் வழியாக திங்கட்கிழமை நல்லூர் ஆலயத்தை வந்தடையும். (203)

## விசேட தேவையுள்ளோருக்கு சுயதொழிற் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.7

விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான சித்திரம், ஓவியம், சிற்பம், கைவினைப் பொருள்கள் தயாரிப்பு போன்ற பயிற்சி நெறிகள் கடந்த மாதம் இலக்கம் 111, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ள ஆர்வமுள்ள விசேட தேவைக்குட்பட்டவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் பயிற்சி நெறிக்குப் பொறுப்பான ஆசிரியரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர்களுக்கான நாளாந்தப் போக்கு வரத்துக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் யாழ் அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார். (203)

# கிழக்கில் தமிழர்களின் காணிகளை முஸ்லிம்கள் கைப்பற்றவேயில்லை

## அமைச்சர் அமீர் அலி விளக்கம்

கிழக்கில் தமிழர்களின் காணிகளை முஸ்லிம்கள் கைப்பற்றியுள்ளனர் என்று கூறப்படுவதில் எந்த உண்மையுமில்லை. முஸ்லிம்கள் யுத்த காலத்தை ஒட்டி எங்கிருந்து இடம்பெயர்ந்தார்களோ அந்த இடங்களிலேயே மீளக்குடியேறுகின்றனர்.

-இவ்வாறு அமைச்சர் அமீர் அலி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வடக்கு-கிழக்கு நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கிழக்கில் முஸ்லிம்கள் தமிழர்களின் காணிகளைப் பிடிக்கின்றனர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலர் இத்தகைய செய்திகளுக்குப் பின்னால் உள்ளனர்.

ஆனால், அப்படி எதுவும் இடம்பெறவில்லை என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

ஒருபோதும் முஸ்லிம்கள் தமிழர்களின் காணிகளைச் சுவீகரிக்கமாட்டார்கள் என்று நான் அடித்துக் கூறுகின்றேன்.

இந்த உண்மையைத் திரிபுபடுத்தி ஊடகங்களில் செய்தியாக வெளியிட்டு அரசியல் நடத்துபவர்கள் அச்செயற்பாட்டை நிறுத்தவேண்டும். (சி)

# கள்ளவாக்கில் எம்.பியானோர் யார்? டக்ளஸா? தமிழ்க் கூட்டமைப்பினரா?

## நாடாளுமன்றில் இப்படியும் தர்க்கம்

கள்ளவாக்குகளின் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்தோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவா அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களா?

-இப்படியான ஒரு தர்க்கம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதையொட்டி இரு தரப்பினருக்குமிடையில் பலத்த வாக்குவாதமும் நிகழ்ந்தது.

இந்த வாக்குவாதம் ஏற்பட்டபோது சபைக்குத் தலைமை வகித்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் என்.சிறிகாந்தா. இரு தரப்பினருக்கும் இடை யில் அமைதியை ஏற்படுத்த அவர் பெரிதும் சிரமப்பட்டார்.




வடக்கு-கிழக்கு நிலைவரம் தொடர்பான விசேட விவாதத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பேசும்போது புலிகள் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டார்.

''இந்நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை-இந்திய உடன்படிக்கை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. இதன் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளினால் வடக்கு-கிழக்கைத் தவிர ஏனைய மாகாணங்கள் பெரும் அபிவிருத்தி அடைந்துள்ளன.

''ஆனால், விடுதலைப் புலிகள் விடுதலை என்று கூறிக்கொண்டு நாட்டின் அமைதியைச் சீர்குலைத்து விட்டனர்.

''இலங்கை-இந்திய உடன்படிக்கை செய்துகொள் ளப்பட்டபோது 800 இற்குக் குறைவான இளைஞர் களே உயிரிழந்தனர். ஆனால், புலிகள் இதனை உதாசீனப்படுத்தி மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததன் பின், 60 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கான பொறுப்பைப் புலிகளே ஏற்கவேண் டும்'' -என்று அமைச்சர் டக்ளஸ் கூறினார்.

இந்தவேளையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், டக்ளஸ் தேவானந்தா மீது வசை பாடினர்.

டக்ளஸ் காட்டிக்கொடுத்தவர். கள்ளவாக்குகளின் மூலம் சபைக்கு வந்தவர். அரசு போட்ட பிச்சைதான் இந்த அமைச்சுப் பதவி என்றெல்லாம் அவர்கள் சாடினர்.

இதனால் அமைச்சர் டக்ளஸுக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் அதிகரித்தது.

அமைச்சர் டக்ளஸும் விட்டபாடாக இல்லை.

''இந்தச் சபைக்கு வந்துள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள் எல்லோருமே கள்ள வாக்குகள் மூலமே வந்தவர்கள். இதனைச் சர்வதேசமும் அறியும். இவர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். புலிகளால் உருவாக்கப்பட்ட மண் பொம்மைகள்.

''தமது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு இங்கே கொழும்பில் இருந்துகொண்டு குப்பை கொட் டுகிறார்கள்''- என்றும் அமைச்சர் டக்ளஸ் சாடினார்.

அப்போதும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இடையூறு செய்துகொண்டே இருந்தனர். சபைக்குத் தலைமை வகித்த கூட்டமைப்பு உறுப்பினரான என்.சிறிகாந்தா, சபையில் அமைதியை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் பலன்தரவில்லை.

எனவே, இடையூறுகளுக்குச் செவிசாய்க்காமல் தொடர்ந்து உரையாற்றும்படி அமைச்சர் டக்ளஸை அவர் பணித்தார். கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றி முடித்தார். (சி)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் இருபத்தோராம் நாளான இன்று வெள்ளிக்கிழமை 'இந்துசமய வளர்ச்சியில் மகளிர்' என்னும் தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவார். மூளாய் ஞான ஒளி அறநெறிப் பாட சாலை, வண். வட கிழக்கு கொண்டலடி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

## ஆண்டவன் ஞாபகமாகவே இரு!

அன்பான இனிமையான வார்த்தைகளையே பேசு. மகாத்மாக்களுடன் சத்சங் செய். மிதமாகச் சாப்பிடு. உன் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்று. யாவரிடத்திலும் சகோதரபாவனையைக் கொள். உன் அரிய நேரத்தை வீணாக்காதே. உன் கெட்ட பழக்கங்களை கண்டுபிடித்து அவற்றை நீக்கு. அதை ஒழிக்க நீதான் தகுந்த உபாயத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். உபயோகமற்ற கூட்டத்தில் செலவழிக்கும் நேரத்தை குறைக்க முயற்சி செய். ஜாக்கிரதையாக இரு. சிறிதே பேசு.

ஞானக்கதிர்

உலக முழுதும் நீயே என்பதை உணர். எல்லா ஜீவராசிகளும் உன்னுடைய ஆத்மாவே என்று அறி. விசுவப்பிரேமை கொள். எப்போதும் இறைவன் ஞாபகமாகவே இரு. எல்லோரிடத்திலும் அன்பு காட்டு. இறைவனிடம் சரணடை. அவரைக் குறித்து தியானி. தெய்வீக ஒளி உன்னிடம் உதயமாகும். நிதானத்தையும் அடைவாய். தினமும் உருக்கமான பிரார்த்தனையின் மூலம் உன் இதயத்தை இறைவனுடன் லயப்படுத்து. அவரிடம் உன் இருதயத்தை திறந்துகாட்டு. இரகசியங்களை மறைக்காதே. குழந்தைபோல் பேசு. உன் பாவங்களை மன்னிக்கும்படி பச்சாதாபத்துடன் அவரிடம் இறைஞ்சிக் கேட்டுக்கொள். மனித உதவியை நம்பாதே. இறைவன் தியானமே எந்த நேரமும் உதவும். இறைவனை [illegible] நம்பி [illegible] அடைவாய். உனக்கு அவருடைய தரிசனம் கிட்டும்.

-சுவாமி சிவானந்தர்.

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

நல்நலம் பாராக் கொள்கை யுடையான்
சலன மில்லாத் தத்துவ நிதன்
பலரும் பைத்திய காரனென் றேச
நலமிகு நல்லையில் நாடக மளித்தான்.
- யோகர் சுவாமிகள்



### என்றுமுளான் முருகனென இயல்பு நிலை தந்துவிடு

சகாராவைச் சம்பங்கி மலர்த்தோட்டமென்றால்
எகிறிக் குதித்திடாயோ எம் தமிழ் முருகா நீ
நிகரற்ற நின்னையோ நின்னருட் தந்தையையோ
கனவிலுங் கண்டிட கடையேனால் முடியவில்லை
ஆனாலும் ஆன்றோர்கள் அன்று சொன்னவற்றை வைத்து
இன்றுன்னை ஏத்துகின்றார் எள்ளளவும் பொருத்தமின்றி
நன்றையா நல்லூரா நானுனக்குச் சொல்லலாமோ
அன்றோடு அருள் பொன்றி விடவில்லையென்று
இன்றுள்ள சந்ததியார் ஏற்றித் துதிக்கும் வண்ணம்
என்றுமுளான் முருகனென இயல்பு நிலை தந்துவிடு.
- கவிமணி அன்னைதாஸன், *உரும்பிராய்.*

### பக்தருக்கு ஆற்றல் தா....!

*திருவிழா நாளில் திரண்டு வரம் கேட்டோம்....*
*தரவேண்டும்! இன்றே தமிழின் - வரலாறு*
*ஓங்கிச் செழிக்க உதவு; அமைதிவெள்ளம்*
*தேங்கிப்போர் வெக்கைபோக்கச் செய்*
*மாரீச மாய அமைதியினை வேட்டையிடு*
*நீதி நியாய நிழல் விரிப்பில் - தீ மிதித்து*
*நிற்கும் எமக்கு நிசமான ஆறுதல் தா!*
*அற்புதஞ் செய், அன்பால் அணை*
*நாத சுரம் முழங்க ஞான இசை ததும்ப*
*வீதி வலம்வாறாய்... வேதனையை - சாதனையாய்*
*மாற்ற முயன்றமைதி நாடும் நின் பக்தருக்கு*
*ஆற்றல் தா... பொய்மை அழித்து.*
- தி.ஜெயசீலன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்டு சொந்தப் பாவனையில் இருக்கும் எந்த உக்கலுமில்லாத 1,10000 கிலோமீற்றர் மாத்திரம் ஓடிய MAZDA 323 1300 சிசி கார், நல்ல நிலையிலுள்ள Pentium 4 Computer, View sonic 17"Monitor, HP Deskjet 3920, Printer உடன் Sony 25" Model KV SW 25 M61, Air Cooler Kenstar 9702 C, Two VHS Decks Panasonic and Sony மற்றும் Indesit Italian Washing Machine உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

588/4, நாவலர்வீதி,
[கனகரெத்தினம் மகாவித்தியாலயம் முன்பாக], யாழ்ப்பாணம்.
தொ.பே.222 9700, 0777550863

(67534)


# நிகழ்வுகள்

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் கிழக்கு நேதாஜீ சனசமூக நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பொது மருத்துவமுகாம், சலரோக மருத்துவ முகாம், விழிப்புணர்வுக் கருத்தரங்கு என்பன நடத்தப்படவுள்ளன.

அத்துடன் இலவச மருந்துவழங்கலும் இடம்பெறும்.

கொக்குவில் லயன்ஸ் கழகத்துடன் தீவகம், கோப்பாய், இணுவில், திருநெல்வேலி வட்டம் ஆகியனவும் இணைந்துசெயற்படவுள்ளன. (203)

* * *

உலக சமாதான வாரத்தை முன்னிட்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் அரியாலை கலைவாணி சிறுவர் விளையாட்டுக் கழகத்தின் இல்லங்களுக்கிடையேயான இரண்டாவது ஆண்டு நிறைவு விழா விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (203)

* * *

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் நட்புதவியாளர்களின் ஒன்றுகூடல் நாளைமறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

# வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கு லொறி வசதியைப் பெற முடியவில்லை

## உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

வடக்கிலிருந்து தென் பகுதிக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கு லொறி வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக உற்பத்தியாளர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதால் குடாநாட்டிலுள்ள வெங்காய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியாது பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து வெங்காயத்தை கப்பல் மூலம் ஏற்றுமதி செய்து உற்பத்திச் செலவையேனும் பெறமுடிந்தது என்றும்-

எனினும் துறைமுகத்திற்கு வெங்காயத்தைக் கொண்டு செல்வதற்கு லொறி வசதியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்றும்- உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202)


## Trinity University USA-Spain
## B. Sc. in Computer Science
## விரிவுரைகள் ஆரம்பம்

08/09/2007- Jaffna | 10/09/2007 - Chankanai

இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்,

✓ஒரு வருடத்தில் காமராஜர் பல்கலைக்கழகத்தின் Post Graduate Diploma in Computer Application சான்றிதழைப் பெறமுடியும். OR

✓இந்திய முன்னணி Software Company களில் பகுதி நேர வேலையுடன் Software Engineering கற்கைநெறியைத் தொடரலாம். OR

✓Institution of British Engineers இன் Graduate Ship in Hardware Engineering சான்றிதழைப்பெற்று British பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடரலாம்.

NORTH LANKA IIT
The Sri Lankan Center of Trinity College and University
Main Street, Chankanai.
060-2214305 0773583616

NEW COLLEGE OF HIGHER STUDIES
No 95, Ariyakulam Junction
Jaffna. 060-2214305



## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில மற்றும் O/L, A/L, B.A. வினாவிடை இலக்கண வகுப்புகள் By:விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (64601)


## தவறிவிட்டது

பொன்னாலை தெற்கு, சுழிபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த இராசையா சிறிதரன் என்பவருடைய தே.அ.அட்டை (801574530v) சுழிபுரத்திற்கும் மானிப்பாய்க்குமிடையில் 05.09.2007 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்) T.P.: 0777238597. (64602)

## தவறிவிட்டது

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த வைரவன் பூமணி ஆகிய எனது தே.அ. அட்டையும், விசேட அ.அட்டையும் புன்னாலைக்கட்டுவனில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். (64548)


## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் - இணுவில்
Spoken English
With Grammar
Lectured By:
NISHANTHAN (Dip.in.Eng.)
புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
சனி-ஞாயிறு
யாழ்.நகரில்- 12 p.m.
இணுவிலில்- 10 a.m.
Note:BARATHY சித்தன்கேணியில்
சனி- ஞாயிறு- 3.00 p.m.

(64549)




உ
சிவமயம்

## காரைநகர், பயிரிக்கூடல்
## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில்
## இராஜகோபுர மஹாகும்பாபிஷேகமும் மணிமண்டபத் திறப்பு விழாவும்

ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுர மஹாகும்பாபிஷேகமும் மணி மண்டபத் திறப்பு விழாவும் ஆவணித் திங்கள் 22ஆம் நாள் (08.09.2007) சனிக்கிழமை காலை 6.49 மணி தொடக்கம் 8.35 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

★ இன்று (07.09.2007 )வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு கர்மாரம்பம், விநாயக வழிபாடு, வாஸ்து சாந்தி, ஸ்தூபி ஸ்தாபனம்.

★ நாளை (08.09.2007) சனிக்கிழமை காலை சுவாமிகளுக்கு அபிஷேகம், கும்பம், வீதிப் பிரதட்சணம், காலை 8 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம், மணிமண்டபத் திறப்பு விழா, கலைஞர்களைக் கௌரவித்தல், பிரசாதம் வழங்கல்.

கும்பாபிஷேகப் பிரதம குரு:
சிவஸ்ரீ கு.சண்முகராஜாக் குருக்கள் (ஆலய குரு).

பயிரிக்கூடல்,
காரைநகர்.

முருகன் அடியார்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 . 11 . 1928



மறைவு 09 . 08 . 2007

### திருமதி சபாரட்ணம் பாக்கியம்

கடந்த 09.08.2007 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பலவழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (08.09.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.
(64480)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


## Jaffna College Institute Of Technology
Vaddukoddai, Jaffna, Srilanka

**Apply for the following courses immediately**

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான தொழில் நுட்பப் பாடநெறிகள்
மிகவும் குறைந்த கட்டணத்தில்..........
கூடிய வசதிகளுடன்............

| Course Name | Duration |
|---|---|
| 01. Diploma in Computer Programming & Data Processing | 01Yr |
| 02. Diploma in Civil Draughtsmanship | 01Yr |
| 03. Australian Computer Society | 02Yr |
| 04. Technician Diploma in Electronics & Telecommunication Engineering | 03Yrs |
| 05. Technician Certificate in Electronics | 01Yr |
| 06. Certificate in Microsoft Office | 03Months |
| 07. Certificate in Computer Hardware | 03Months |
| 08. Certificate in Printing Technology | 04Months |
| 09. Certificate in Macromedia Flash MX | 03Months |
| 10. Certificate in Maya Fundamentals | 02Months |
| 11. Certificate in C++ | 02Months |
| 12. Certificate in Visual Basic | 02 Months |

வசதிகள்


- அமைதியான சூழல்
- குளிரூட்டப்பட்ட கணனிச் செயல்முறை, ஆய்வுகூடம், வகுப்பறை
- நூல்நிலையம்
- சிற்றுண்டிச்சாலை
- விளையாட்டுத் தளங்கள்
- வரையறையற்ற செயல்முறை பயிற்சி வகுப்புகள்

மேலதிக விவரங்களுக்கு:

Director,
Jaffna College Institute Of Technology,
Vaddukoddai.

Tel: 0602213139 (சி.53572) E.mail: jcit @ sltnet.LK


## எட்டாம் ஆண்டின் நினைவு ஆராதனை



அமரர்
### வல்லிபுரம் அப்பாத்துரை
(ஆசிரியர்)

தோற்றம் 11.09.1935 | மறைவு 05.09.1999

திதி: 07.09.2007 (ஏகாதசி)

**இன்றைய உங்கள் எட்டாம் ஆண்டு நினைவு நாளில் உங்கள் ஆத்மா என்றும் இறைவனுடன் சங்கமமாகி இருக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.**

'தாரணிவாசா'
உடுவில் கிழக்கு.

மனைவி; பிள்ளைகள்.

(64517)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி கெற்பெலி பரமேஸ்வரன் ஆலய அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும். (203- 51)

* * *


சாட்டி, புனித சிந்தாத்திரை அன்னை ஆலய திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (203- 51)

* * *

வட்டு. வடக்கு சித்தன்கேணி பிரமணாச்சித் தோட்டம் கற்பகப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு [illegible] [illegible] நடைபெறவுள்ளது.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
15-12-1962

உதிர்வு
10-08-2007

அமரர்
### தர்மலிங்கம் சுந்தரமூர்த்தி (சுந்தி)
(இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்)

அன்னார் நோயுற்றிருந்த வேளையிலும் மரணச்செய்தி அறிந்த வேளையிலும் எமது துயரில் பல்வேறு வழிகளாலும் பங்கேற்ற அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 09.09.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் பகல் போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புக்கரம் கூப்பி அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தெற்கு,புலோலி. (64568) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர் தாயகத்தைத் துண்டாடி நாடு துண்டுபட வழி செய்யாதீர்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் அதிர்ச்சித் தகவல் ஒன்றை அம்பலப்படுத்தியிருக்கின்றார். பௌத்த - சிங்களப் பேரினவாத மனவமைவில் ஊறித் திளைத்த தென்னிலங்கையின் உண்மைச் சொரூபத்தை அந்த அதிர்ச்சித் தகவல் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றது.

திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையே அந்த மாவட்டங்களின் சில கிராமங்களை ஒன்றிணைத்து, அவற்றில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, அப் பிரதேசத்தில் தனிச் சிங்கள வலயம் ஒன்றை உருவாக்கும் திட்டத்துடன் அரசு செயற்படுகின்றது என்பதே சம்பந்தன் போட்டுடைத்த அரசின் குட்டாகும்.

இலங்கை அரசின் சார்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரிய இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் மறுத்துரைத்தாலும், காலங்காலமாக தென்னிலங்கைச் சிங்கள அரசுகள் கபட நோக்கோடு மேற்கொண்டுவரும் வரலாற்றுக் கொடூரத்தின் மற்றோர் அங்கமே இது என்பது சர்வதேசம் வரை புரிந்த விவகாரம்தான்.

சிறுபான்மையினரான தமிழருக்கு விரோதமான காழ்ப்புணர்வைத் தனது மனவமைப்பின் அடி நாதமாகக் கொண்ட பௌத்த - சிங்களத் தேசியவாதம், தமிழினத்தின் தனித்துவ அடையாளங்களை சிதைத்து அழிப்பதன் மூலம் திருப்தி கொள்ளும் அநாகரீகக் கொடூரத்தை, கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேல் இந்தத் தீவில் அரங்கேற்றி வருகின்றது என்பதும் உலகறிந்த உண்மையே.

தமிழரின் தனித்துவமான இன அடையாளங்களாக இருப்பவை அவர்களின் மொழி, வாழ்க்கை முறையும் பண்பாடும் பழக்க வழக்கங்களும் மற்றும் அவர்களது பாரம்பரிய வாழிடமான தாயக பூமி ஆகியவையாகும்.

இவை மூன்றையும் தனித்தனியே இலக்குவைத்து அழித்தொழிக்கும் இனக் கபளீகரப் போக்கு திட்டமிடப்பட்ட அரச செயற்பாடாக - கருத்தியலிலும், கொள்கையளவிலும், செயன்முறையிலும் - இங்கு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிர்வாக ரீதியில் துண்டாக்கும் செயற்பாடு, இந்த அரசுத் தலைமையால் இப்போதுதான் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகத்தை பூகோள ரீதியாகத் துண்டாடிச் சிதைக்கும் கொடிய நடவடிக்கை, இலங்கையின் ஆட்சி அதிகாரம் பிரித்தானிய காலனித்துவத்திடமிருந்து நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் கைமாறிய காலம் தொட்டே தீவிரமாக முன்னெடுக்கப்படத் தொடங்கிவிட்டது.

தமிழரின் தனித்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும் அவர்களது பாரம்பரிய பூமியை - தனித்துவத் தாயகத்தை - அழித்து சிதைப்பதற்கான திட்டமிடப்பட்ட ஒடுக்குமுறையின் குரூர வடிவமாக இந்தக் குடியேற்றங்களைக் குறிப்பிடலாம்.

தமிழ்மக்களை அவர்களின் தாயகப் பூமியிலேயே சிறுபான்மையினராக்கி, சனத்தொகை விகிதாசாரத்தைச் சிதைப்பதும் -

அந்தத் தாயகப் பூமியை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் துண்டாக்கி தாயக மண் மீதான அவர்களது உரிமையை நிராகரிப்பதும் -

ஒன்றிணைந்த தமிழர் தாயகம் என்ற வலுவைச் சிதறடித்து அவர்களைப் பலவீனப்படுத்துவதும் -

எனப் பல் பரிமாண நோக்கோடு இந்தத் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே கல்ஓயா, மாதுறு ஓயா போன்ற திட்டங்கள் மூலம் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகள் பௌத்த - சிங்கள தேசியத்தால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.

அல்லை, கந்தளாய் சிங்களக் குடியேற்றங்களும், யான் ஓயா நதித்திட்டமும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழரின் தாயகப் பூமியைப் பறித்தெடுத்து விழுங்கின.

இப்போது அது ஒருபுறம் திருகோணமலை, மூதூர், சம்பூர் பகுதிகளையும் -

மறுபுறம் திருகோணமலை மாவட்ட எல்லைகளையும் தாண்டி முல்லைத் தீவு மாவட்ட தென்புறப் பிரதேசத்தில் மணலாறு (வெலிஓயா), கொக்கிளாய்ப் பிரதேசங்களையும் - இலக்கு வைத்து நகர்வதையே சம்பந்தன் எம். பியின் எச்சரிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சிங்கள அரசுகளின் ஆசீர்வாதத்துடனும், பின்புல ஆதரவுடனும் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களே தமிழர், சிங்களவர் ஆகிய இரு தேசியங்கள் இடையே மீண்டும் சீர் செய்து, இணங்க வைக்க முடியாத நிரந்தரப் பிளவை உருவாக்கி அந்தப் பிரிவை நிலைப்படுத்தின; இரு இனங்களுக்கிடையேயான முரண்பாட்டை மேலும் கூர்மைப்படுத்தி, தீவிரமுற வைத்து, சமரச சகவாழ்வை அசாத்தியமாக்கின.

தமிழர் தாயகத்தைத் துண்டாடும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் இந்த முயற்சிகள், இலங்கைத் தீவைத் துண்டாடி, தமது தாயகத்தைத் தனி இறைமையுள்ள பிரதேசமாக மீள உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே தமக்கும், தமது இனத்துக்கும் மீட்சி கிட்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டைத் தமிழர்கள் மனதில் இறுக்கமாகவும் ஸ்திரமாகவும் ஏற்படுத்தும் என்பதை கொழும்பு புரிந்து கொள்வது நல்லது.

ஆனால் அதைப் புரிய மறுத்து, தமிழர் தாயகத்தை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் துண்டாட முனைந்து, அதன் வாயிலாக இலங்கைத் தீவை துண்டாடுவதற்கு வழி சமைக்கிறது இந்த அரசியல் அதிமேதாவித்தனம்.

## வலி.வடக்கில் மீளக்குடியமர்வதற்கு விரும்புவோரை காணி உறுதியின் பிரதிகளைச் சமர்ப்பிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.7

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் மீளக்குடியமர விரும்பும் மக்களை அவர்களது காணிகளின் உறுதிகளின் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர விரும்பும் மக்களின் விவரங்களைத் திரட்டுவதற்கும் காணி உறுதிகளை காணிப்பதிவாளர் திணைக்களத்தில் உறுதிசெய்துகொள்வதற்கும் வசதியாக காணி உறுதியின் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு வலி.தெற்குப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

ஏற்கெனவே விசாரணைக்குச் சமுகமளித்தவர்களும் சமுகமளிக்காதவர்களும் இம்முறை சமுகமளிக்கலாம் எனப் பிரதேசசெயலர் ரி.மஞ்சுளாதேவி தெரிவித்துள்ளார்.

காணி உறுதிப் பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு இடங்களும் திகதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவைவருமாறு -

* 08.09.2007-குப்பிளான் ஜே/207, 208, 209, 210, 211.
* 09.09.2007 - சைவசன்மார்க்க வித்தியாலயம் - ஜே/201, 202, 203, 204, 205, 206.
* 13.09.2007 - பிரதேசசெயலகம், வலிதெற்கு - உடுவில் - ஜே/182, 183, 184, 185, 186, 187.
* 13.09.2007 - முத்தமிழ்மன்றம், சுன்னாகம் - ஜே/196.
* 13.09.2007 - (பிரதேசசபை) சுன்னாகம் வாசிகசாலை - ஜே/197, 198, 199, 200, 195.
* 13.09.2007 - இணுவில் அறிவாலயம் - ஜே/188,189,191,192, 193, 194. (1)

## பூஸாவில் இன்று கைதிகளை சந்திக்கிறது அமைச்சர்கள் குழு

கொழும்பு, செப்.7

கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரைச் சந்தித்துப் பேசுவதற்காக இன்று உயர்மட்டக் குழு ஒன்று அங்கு செல்கிறது.

'காணாமற்போதல் மற்றும் ஆள் கடத்தல்கள் தொடர்பான, விவகாரங்களைக் கண்காணிக்கும் குழு' - என்ற பெயரில் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளான அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களே இன்று பூஸா செல்கின்றனர்.

அமைச்சர் ராஜித சேனாரட்ன, பிரதி அமைச்சர்கள் பெ.இராதாகிருஷ்ணன், ஏ.ஏ.பாயிஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரதாப்சிங், பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஹான் அபேயவர்தனா, மேற்படி குழுவின் பொறுப்பாளர் லால் கொடிக்கார ஆகியோர் அடங்கிய குழுவே பத்திரிகையாளர்கள் சகிதம் இன்று பூஸா செல்கிறது.

அங்குள்ள கைதிகளில் விசாரணை முடிவுற்றோரை விடுவித்தல் மற்றும் கைதிகள் தாக்கப்படுகின்றனர் என்றும், அவர்களுக்கு உணவு வழங்கப்படுவதில்லை என்றும் கூறப்படும் பிரச்சினைகள் ஆகியன குறித்து இக்குழு நேரில் ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## கலாசாரப்பேரவையின் செயற்குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்.மாவட்ட கலை,கலாசார பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

செயற்குழு உறுப்பினர்களைக் கலந்துகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## கொடிகாமத்தில் பஸ் சாரதியை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.7

கொடிகாமத்தைச் சேர்ந்த தனியார் பஸ் சாரதி ஒருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் காணவில்லை என அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுமுறைப்பாடு செய்துள்ளனர்.

கொடிகாமம், கச்சாய் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிறீதரன் (வயது 38) என்பவரையே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

கொடிகாமம் பஸ் நிலையத்துக்குச் செல்வதாக கூறிச்சென்ற இவர் வீடு திரும்பவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## கசிப்பு விற்பனைக்கு காலையில் அபராதம் செலுத்தியவர் மீண்டும் நான்கு மணி நேரத்தில் பொலிஸாரால் கைது!

சுன்னாகம், செப்.7

கசிப்பு விற்பனை செய்தமைக்காக நீதிமன்றத்தில் அபராதம் செலுத்திய ஒருவர், அன்றைய தினமே மாலையில் கசிப்பு எடுத்துச் செல்லும்போது பொலிஸாரிடம் சிக்கினார்.

அச்சுவேலியைச் சேர்ந்த மயில்வாகனம் ஞானசேகரன் என்பவரை கசிப்பு விற்ற குற்றச்சாட்டின்பேரில் மதுவரித் திணைக்களத்தினர் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு ஆஜர் செய்தனர்.

அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத்தை செலுத்திவிட்டுச் சென்ற அவர், நண்பகல் 2 மணியளவில் மீண்டும் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்டவர் முச்சக்கர வண்டியில் பீப்பா ஒன்றை எடுத்துச் செல்வதை அவதானித்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துடாவைற், அதனை மறித்துச் சோதனை நடத்தினார்.

45 போத்தல் கசிப்பு முச்சக்கர வண்டியில் எடுத்துச் செல்லப்படுவதை கண்டுபிடித்த அவர், ஞானசேகரனையும் அவருடன் சென்ற ஒருவரையும் முச்சக்கர வண்டிச் சாரதியையும் கைது செய்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் ஆஜர் செய்தார்.

முச்சக்கர வண்டிச் சாரதிக்கும், பிரஸ்தாப நபருடன் பயணம் செய்தவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினால் 15 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

கசிப்பு உரிமையாளருக்கு 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினால், 21 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

முச்சக்கர வண்டியை நீதிமன்றத்தில் தடுத்துவைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மேல் விசாரணையை எதிர் வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-1-68)

## பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியை தடுப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை

### சாதகமான முடிவு இல்லாவிடில் தொழிற்சங்கப் போராட்டம் தொடருமாம்

கொழும்பு, செப்.7

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என ஐந்து ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இந்த விவகாரம் தொடர்பாக அநுராதபுரம் பகுதியைச்சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவன் ஒருவரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் அதையொட்டியே மேற்படி இடைக்காலத் தடை உத்தரவை விதித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, ஜகத் பாலபட்டபெந்தி ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தது.

அநுராதபுரம் நிஹந்த ஸேத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவனும், மேற்படி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவருமான எச்.எச்.ருக்மன் சேனநந்த என்பவர் சார்பிலேயே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் விடைத்தாள் திருத்தும் பணியைத் தடுப்பதற்கு எதிராக இடைக்காலத் தடைஉத்தரவு ஒன்றை விதித்தது.

அந்தப் பணியைத் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதேவேளை -

நீதிமன்ற உத்தரவு வெளிவந்த போதும் எமது கோரிக்கைகள் தொடர்பாக கல்வியமைச்சு அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

எமது கோரிக்கைகளுக்கு சாதகமான முடிவை அரசு முன்வைக்காவிட்டால், போராட்டத்தை விஸ்தரித்து மேலும் தீவிரமாக முன்னெடுக்க முடிவு செய்துள்ளோம் என்று ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேற்றிரவு தெரிவித்தனர். (அ-சி-1-11)

## தேசிய மட்டப் போட்டிக்கு செல்லப் பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.7

மாத்தறையில் நடைபெறவுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தேசியமட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளச் செல்லும் வீர, வீராங்கனைகளை பயண ஏற்பாடுகளுடன் நாளை காலை 7.30க்கு யாழ்.ரயில் நிலையத்துக்கு வருமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 13ஆம் 16ஆம் திகதிகளில் மாத்தறையில் கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன. (அ-1)

## துடுப்பாட்ட மத்தியஸ்தர் வகுப்பு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மத்தியஸ்தர்களுக்கான வகுப்புகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தால் கடந்த வாரம் இந்த வகுப்புகள் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (1)

## மக்கள் வங்கியில் அடகு நகை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம், செப்.7

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியக் கிளைகளில் 31.03.2006க்கு முன் அடகு வைத்து மீளப்பெறாத நகைகள் நாளை முதல் ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

நாளை சனிக்கிழமையும் மறுநாளும் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளிலும் ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் நெல்லியடிக் கிளையிலும் வைத்த நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்று உதவிப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 22 | சனிக்கிழமை 08.09.2007 |
| திதி : துவாதசி | மாலை 05.50 |
| நட்சத்திரம் : | பூசம் மு.இ. 08.41 |
| சுபநேரம் | : 03.04 - 04.34 |
| ராகுகாலம் | : 09.04 - 10.34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று நிறைவேற்றப்பட்ட ஐந்து நிதிச் சட்டமூலங்கள்

கொழும்பு, செப். 7

நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு நிறைவேற்றப்பட்ட நிதி திருத்தச் சட்டங்களின் விவரம் வருமாறு-

* 2004ஆம் ஆண்டின் 11ஆம், 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் திருத்தம்:- இச் சட்டத்தின் மூலம் கையடக்கத் தொலை பேசிக்கான வரி இரண்டரை சதவீதத்தில் இருந்து ஏழரை சதவீதமாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

ஒவ்வொரு தொலைபேசிப் பாவனை யாளரிடமும் இருந்து மாதாந்தம் 50 ரூபா நிரந்தரக் கட்டணமாக அறவிடப்படும் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனா திபதியுடன் பேசியதன் பயனாக மாதாந்தக் கட்டணம்என்ற திட்டம் நீக்கப்பட்டுள்ள தாகவும், வரி விகிதம் பத்து வீதமாக அதிக ரிக்கப்பட்டுள்ளதாகவும் சபையில் குறிப் பிட்டார்.

* பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிரு த்தி அறவீட்டு திருத்தச் சட்டம்:- இது வரை 2.5 வீதமாக இருந்த மோட்டார் வாக னவரி மூன்று வகையாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

(அ) 1,600 ஸி.ஸிக்கு மிஞ்சாத சிலிண்டர் கொள்ளளவுடைய வாகனங் களுக்கு - இரண்டரை வீதம்.

(ஆ) 1,600 முதல் 2,000 ஸி.ஸி வரை யிலான சிலிண்டர் கொள்ளளவுடைய வா கனங்களுக்கு - ஐந்து வீதம்.

(இ) 2,000 ஸி.ஸிக்கும் அதிகமான சிலிண்டர் கொள்ளளவுடைய வாகனங்க ளுக்கு ஏழரை வீதம்.

* உற்பத்தித் தீர்வைகள் விசேட ஏற்பா டுகள் திருத்தச் சட்டம்:- இதனை அறிமு கப்படுத்துவதன் மூலம் இதுவரை காலமும் பத்து சதவீதமாக இருந்த உற்பத்தித் தீர்வை பதினைந்து வீதமாக அதிகரிக்கப் படவுள்ளது.

* விசேட வியாபாரப் பண்ட அறவீடு:- சந்தைக்கு வரும் பல்லினப் பொருட்கள் மீதான விற்பனை வரி, தீர்வை அறவீடு, வற் வரி என்பன போன்ற சிக்கலில் இருந்து விடுபடும் வகையில் குறிப்பிட்ட பொருட்களுக்கு வியாபாரப் பண்டங்கள் அறவீடு என ஒரு வரி அறவிடப்படும்.

(சி)

## நல்லூர் பக்தர்களுக்கு விசேட விமானசேவை

யாழ்ப்பாணம், செப். 7

நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவில் பங்குகொள்ளும் பக்தர்களின் வசதி கருதி, விமானப் படை விமானம் மூலம் பயணி கள் சேவை மேற்கொள்ள வசதி செய்யப்பட் டுள்ளதாக பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. கொழும்பில் இருந்து 35 பக்தர்கள் அழைத்து வரப்பட்டனர்.

திருவிழாவில் கலந்துகொண்ட 47 பக் தர்கள் கொழும்புக்கு திருப்பி அழைத்துச் செல்லப்பட்டனர். பக்தர்களின் நலன் கருதி இந்த இருவழிப் பயண ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது - என்றும் தலைமையகச் செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் செயலர் பிரிவில் ஊரடங்கு மேலும் தளர்வு

யாழ்ப்பாணம், செப். 7

நல்லைக் கந்தன் ஆலய பெருந்திரு விழாவை ஒட்டி நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு மேலும் அரை மணி நேரம் தளர்த்தப்பட் டுள்ளது.

நேற்று முதல் நாளைமறுதினம் ஞாயிறுக் கிழமை வரை ஊரடங்குத் தளர்வு நடை முறைப்படுத்தப்படும் என பலாலி படைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

நல்லூர் பிரதேச செயலகத்தில் மட்டும் இரவு 8 மணிமுதல் அதிகாலை 4.30 மணி வரையும் ஏனைய பகுதிகளில் இரவு7 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரையும் ஊர டங்கு நடைமுறையில் இருக்கும்.

கடந்த 20ஆம் திகதி முதல் நல்லூர் பிர தேச செயலர் பிரிவில் இரவு 7.30 மணி முதல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டு வருவது தெரிந்ததே. (1-5)

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் அதே பாணியில் நாடாளுமன்றத் தில் செயற்படப்போவதாக கட்சியின் செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தன்னிச்சையாக அரசு செயற்படுவதால், அமர்வுகளை குழப்பி அரசுக்கு எதிரான எதிர்ப்பைக் காட்டப் போவ தாக அவர் தெரிவித்தார்.

(அ-1)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியின் செயலகச் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவித்தது.

புதுடில்லிப் பேச்சுக்கள் தொடர்பாக அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் இடம் பெற்றிருந்த மற்றைய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடு வது குறித்தும் இலங்கையின் இனப்பிரச் சினையை அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்த்துக்கொள்வது குறித்தும் இரு தரப்பும் ஆக்கபூர்வமான கலந்தாலோசனைகளில் ஈடுபட்டன. கிழக்கு மாகாணத்தின் தற்போ தைய நிலைமை, வடபகுதியில் இடம்பெற்று வரும் மனிதாபிமான நடவடிக்கைகள் ஆகி யன குறித்து இலங்கை அதிகாரிகள் இந் தியத் தரப்புக்குத் தெளிவுபடுத்தினர்.

கிழக்கு மாகாணம் புலிகளின் பிடியிலி ருந்து விடுபட்டிருக்கின்றது. ஆனால், வடக்கின் மன்னாரில் இராணுவ நடவடிக்கை தொடர்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு காணும் பொறுப்பு சர்வகட்சி மாநாட் டிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதன் பணியை முடுக்கிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக இலங்கைத் தரப்பு விளக்கியது.

இலங்கையின் இறைமை மற்றும் ஆள் புல ஒருமைப்பாட்டை மீண்டும் உறுதிப் படுத்திய இந்தியத் தரப்பு, இலங்கைத் தமி ழர்களின் நீதியான ஆதங்கங்களை நிறைவு செய்யும் தீர்வு ஒன்று அதிகாரப் பகிர்வு மூலம் காணப்படும் என்று எதிர்பார்ப்பதாக வும் தெரிவித்தது.

-இப்படி அந்தச் செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

புதுடில்லி சென்றிருந்த இலங்கை அர சின் உயர்மட்டக்குழு இன்று கொழும்பு திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர் என்.சிறிகாந்தா பேசும் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக் கடி குறுக்கீடு செய்துகொண்டே இருந் தார். அப்போது கூட்டமைப்பு உறுப்பினர் கள் அமைச்சருடன் பெரும் தர்க்கம் செய்தனர். அதை ஏனைய கட்சிகளைச் சார்ந்த வர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த னர். தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டி ருந்த சர்ச்சைகளும் குழப்பங்களும் வாக் கெடுப்பு வேளையில் உச்சக்கட்டத்தை அடைந்தன.

### ''எலக்ரோனிக்'' முறையிலான வாக்களிப்பு

சட்டமூலங்கள் மீதான வாக்கெடுப்பு நேற்று முதன்முறையாக 'எலக்ட்ரோனிக்' முறை மூலம் நடத்தப்பட்டது.

ஐ.தே.க., ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு ஆகிய கட்சிகள் ஒட்டுமொத்த மாக எதிர்த்து வாக்களித்தன.

அதேவேளை, இ.தொ.கா., ஸ்ரீல.மு.கா., ம.ம.முன்னணி என்பன அரசுடன் சேர்ந்து ஆதரவாக வாக்களித்தன.

2004ஆம் ஆண்டின் 11ஆவது இலக்க நிதித் திருத்தச் சட்டம் 18 மேலதிக வாக் குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 106 வாக்குகளும், எதிராக 88 வாக்கு களும் கிடைத்தன என அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது சட்டவரைவின் மீதான வாக்கெடுப்பிற்கு சபாநாயகர் உத்தர விட்ட போது, அதனை ஐ.தே.கவினர் ஆட்சேபித்த னர்.

அதாவது, நாடாளுமன்றத்தில் 'எலக்ட் ரோனிக்' முறையில் வாக்கெடுப்பு நடத்து வது சட்டவிரோதமானது. வாய்மூலமே வாக் கெடுப்பு நடத்தப்படவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்ற நிலையி யல் கட்டளையைச் சுட்டிக்காட்டினார்.

''இதனை ஆரம்பத்திலேயே கூறியிருக் கலாம்தானே. முதலாவது வாக்கெடுப்பில் கலந்துகொண்டீர்கள், இப்போது ஏன் ஆட் சேபிக்கவேண்டும்?'' - என்றார் சபாநாய கர். இதனால் சிறிது சர்ச்சை ஏற்பட்டது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றை ஏற்றுக்கொண்டு எல்லாச் சட்ட மூலங்களுக்கும் வாய்மூலம் வாக்கெடுப்பு நடத்த நபாநாயகர் உத்தரவிட்டார்.

அப்போது ஏற்கனவே வாக்கெடுப்பு நடத்தி அங்கீகரிக்கப்பட்ட சட்ட வரை வுக் கும் வாய்மூல வாக்கெடுப்பு நடத்தப் பணித் தார் அவர்.

இதனை ஐ.தே.க.வும் ஜே.வி.பியும் ஆட் சேபித்தன. ஏற்கனவே அங்கீகரிக் கப்பட்ட சட்ட வரைவிற்கு மீண்டும் வாக் கெடுப்பு நடத்துவது சட்டவிரோதம் என அக் கட்சி யினர் வாதிட்டனர்.

### இரு தரப்பினரும் சபா பீடத்தின் நடுவே...

சபாநாயகர் அதனை ஏற்காமல் வாக் கெடுப்பிற்கு உத்தரவிட்டார். ஆளுந் தரப் பினர் எழுந்து நின்று வாக்களித் தனர். அதே வேளை, எதிர்த்தரப்பினரும் எழுந்துநின்று ஆட்சேபனை தெரிவித்ததோடு, சபா பீடத் தின் நடுவே வந்துவிட்டனர். இதனை அவ தானித்த ஆளுந்தரப்பினரும் நடுவே வந்து விட்டனர்.

சபை நடுவே வந்த இருதரப்பினரும் சபாநாயகரின் மேடையைச் சுற்றிவளைத் துக் கொண்டனர். சிற்றூழியர்களும் படைக் கல சேவிதரும் சபாநாயகருக்குப் பாதுகாப் பாகச் சூழ்ந்துநின்றுகொண்டனர்.

அப்போது ஆளுங்கட்சி உறுப்பினர் களுக்கும், ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு மிடையில் பெரும் குஸ்தி நடந்தது. முஷ் டியை முறுக்கிக்கொண்டு ஒருவரை ஒரு வர் தாக்கிக்கொண்டனர். சில பிரதி அமைச் சர்கள் வேஷ்டியை மடித்துக்கொண்டு பாய்ந் தமையையும் காணமுடிந்தது.

சபாநாயகரின் பீடத்தின் பின்புறமா கவே இந்த மோதல்கள் இடம்பெற்றன. சபாநாயகரின் பீடத்தைக் குஸ்தி மேடை யாக்கிவிட்டனர்.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, மஹிந் தானந்த அளுத்கமகே உட்படப் பலர் ஆளுந் தரப்பிலும், மஹிந்த திலகரத்ன, ரங்க பண் டார தலைமையில் எதிர்த்தரப்பினரும் முட்டிமோதிக்கொண்டனர்.

இந்த அமளிதுமளிகளுக்கிடையில் சபா நாயகர் ஏனைய சட்டவரைவுகளுக்கும் வாக் கெடுப்பு நடத்த உத்தரவிட்டார். சபை நடுவே உறுப்பினர்கள் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும்போது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஏனைய நான்கு சட்ட வரைவுகளும் குரல் மூலம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டன என அறிவித்த சபாநாயகர், சபை அமர்வுகளை ஒத்திவைத்துவிட்டு எழுந்து சென்று விட்டார். சபாநாயகர் சென்ற பின்னும் இரு தரப்பினருக்குமான இழுபறிச் சர்ச்சை ஓயவில்லை.

## ஜே.வி.பியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஜே.வி.பியின் நாடா ளுமன்ற உறுப்பினர் விமல் ரட்ணாயக்க கூறியிருப்பவை வருமாறு:-

அரசு நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த நிதித் திருத்தச் சட்டமூலங்கள் மிகவும் பாரதூரமானவை. இந்தச் சட்டமூலங் களின் மூலம் அப்பாவிப் பொதுமக்களி டமிருந்து பணத்தைச் சுரண்டவே அரசு தீர் மானித்துள்ளது. இந்த வரிகளில் ஒன்றுதான் கையடக்கத் தொலைபேசிப் பாவனையா ளர்களிடமிருந்து 10 வீதம் வரியை அறவிடும் முடிவு.

இந்த வரிவிதிப்பை நிறுத்துமாறு நாம் ஏற்கனவே அரசைக் கேட்டுள்ளோம். ஆனால் அரசு அதற்கு இணங்கவில்லை. இதன் காரணமாக நாங்கள் இந்தச் சட்டமூலத் துக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தோம். மக்களின் நலன்கருதி இந்தச் சட்ட மூலங் களை எதிர்க்கத் தீர்மானித்தோம்.

'எலக்ட்ரோனிக்' மூலமாக வாக்குப் பதிவு இடம்பெற்றது. முதலாவது சட்டமூலத்திற் கான வாக்கெடுப்பு இடம்பெற்று முடிந்த போது, அந்த எலக்ட்ரோனிக் முறைமை பிழை யானது என்பதை நாம் அறிந்தோம். அடுத்த சட்ட மூலங்களிற்கான வாக்களிப்பை பழைய முறைமை மூலம் நடத்துமாறு நாம் சபாநாயகரைக் கேட்டோம். ஆனால் முத லில் முடிக்கப்பட்ட சட்டமூலத்தின் மீதும் மீண்டும் வாக்கெடுப்பு நடத்த சபாநாயகர் முடிவெடுத்தார்.

சட்டமூலம் ஒன்று வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்ட பின் னர் அதை மீண்டும் வாக்கெடுப்பிற்கு விடமுடியாது. இதன்காரணமாகவே நாம் அதை எதிர்த்தோம். ஆனால் இந்தச் சட்ட மூலங்கள் அரசின் இணக்கத்துடன் மாத் திரம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும் இந்தச் சட்டமூலத்திற்கு ஐ.தே. கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்நிலையில் இந்தப் பிரச்சினையை நாம் இன்று நாடாளுமன்றத்தில் கிளப்புவோம்- என்றார். (சி)

## ஒரு மணிநேர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைச் சுட்டுவிட்டுச் சென்றனர்.

அவரிடம் இருந்து மீட்கப்பட்ட அடை யாள அட்டையில் இருந்து அவர் கடற் கரை வீதி, நாவாந்துறையைச் சேர்ந்தவர் என இனங்காணப்பட்டுள்ளனர்.

சடலம் இனங்காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட் டுள்ளது.

இவ்விரு சம்ப வங்கள் தொடர் பாக யாழ்.நீதிவான் இ.த. விக்னராஜா விசாரணைகளை நடத்தினர். (அ-1)

## கைத் தொலைபேசிக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசிப் பாவனையைப் பயன்படுத்து கிறார்கள்.

நிலையாக கட்டணமாக ஒவ்வொரு கைத் தொலைபேசிக்கும் ஐம்பது ரூபா அற விடும் முந்திய திட்டத்தைக் கைவிடுவதன் மூலம் இந்தப் பாவனையாளர்கள் அதிக நன்மையடைகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நிதி அமைச் சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் அமைச்சரவையிலும் பேசப்பட்டது. இறுதி யாக 50 ரூபா அறிவிடும் திட்டம் நீக்கப் பட வேண்டும் என்ற ஆலோசனையை நான் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினேன். ஜனாதி பதி ஏற்றுக்கொண்டார். அதனால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது நான்கு கையடக்கத் தொலை பேசி நிறுவனங்கள் இலங்கையில் உள்ளன. மிக விரைவில் மேலும் ஒரு நிறுவனம் இலங் கைக்கு வரவுள்ளது. இதனால் போட்டித் தன்மை ஏற்படும். போட்டி ஏற்பட்டால் நிச் சயம் கட்டணங்களும் குறையும்.

50 ரூபா நிலையான கட்டணம் அறவிடப் படும் திட்டம் கைவிடப்பட்டதன் மூலம் பாவனையாளர்கள் நலன்பேணப்பட்டுள் ளது. புதிய பாவனையாளர்களுக்கும் இது ஊக்குவிப்பாய் அமையும்

- என்றார். (சி)

## கிழக்கில்...

(முதலாம் பககத் தொடர்ச்சி)

இந்தப் பின்னணியிலேயே, உத்தேச தேர் தல் திட்டத்தின் சாதக, பாதக நிலைகளை சீர்தூக்கிப் பார்த்த அரசுத் தலைமை, அத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைக்கும் யோசனைக்கு வந்திருப்பதாகவும் சம்பந்தப் பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந் தது.

அதேசமயம், நிலைமை சீரடையும் வரை பார்த்திருக்காமல், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவாக - அதில் கூறப்பட்டபடி - மாகாண சபைக்குரிய அதி காரங்களைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆளும் தரப்பின் கூட்டணிக் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தொடர்ந்து அரசுத் தலை மையை வலியுறுத்தி வருகின்றது. அந்த வற்புறுத்தலுக்கு சாதகமாக செயற்பட அரசுத் தலைமை தற்போது இணங்கி யிருக்கின்றது என்றும் தெரிகின்றது.

கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் மக் களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத் தில் பல்வேறு தரப்பினரையும் கொண்ட ஓர் உயர் ஆலோசனைச் சபையை மாகாண ஆளு நரின் கீழ் நிறுவி, அந்த சபையின் வழி காட்டல்கள் மற்றும் சிபாரிசுக்களுக்கு அமைய மாகாண ஆளுநரின் நிர்வாக முறையை வழிப்படுத்துவதன் மூலம், மேற்படி மாகாண நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பை ஏற்படுத்தலாம் என அரசு உயர்மட்டத்துக்கு ஆலோசனை தெரி விக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

உடனடியாக கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தா விட் டாலும், அங்கு மாகாணசபை நிர்வாகத்தை மக்கள் மயப்படுத்த அரசுத் தலைமை தீர்மானித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

கணக்கீடு 2009
தனிவியாபார முடிவு க/கு
சொத்து விற்பனை
சனி, ஞாயிறு - 8மணி
2008
பங்குடமை
சனி, ஞாயிறு - 9மணி
S.S. சீலன் B.B.A. (spl)
வணிகக்கல்வி
2008
Paper Class
சனி, ஞாயிறு - 8மணி
உதயமோகன்
ஆரம்பம்:08.09.07
C.C.A.
சுன்னாகம்.

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ். நகர்
PHYSICS PAPER CLASS
* அலகு ரீதியான மீட்டல்
* கடந்த கால வினா விடை
* மாதிரி வினா விடை
Note: நீண்ட இடை வெளிக்கு பிறகு எமது வழமையான பௌதிகவியல் ஆசிரியர்
ஆரம்பம்: 08.09.2007
Sat. 2.00 p.m.
(அனுமதிக்கு முந்துங்கள்)

சிங்களம்
By: T. [illegible]
(Ret. Ad. Govt. Agent)
Time Your choice
கற்சுவி
166, நாவலர் வீதி யாழ்.

MY COMPUTER
இரண்டாவது இதழ் சகல
021 4591871

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
அனைத்துக் கணனிக் கந்தை நெறிகளும் ஆரம்பம்!

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org